தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம்

# வருடாந்த அறிக்கை

# 2013

NIOSH

National Institute of Occupational Safety and Health • Sri Lanka

# தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம்

**திரு. காமினி லொக்குகே**

அமைச்சர் - தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

**திரு. சரத் வீரசேகர**

பிரதி அமைச்சர் - தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

**டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜேவீர**

செயலாளர், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

தலைவர், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

**டாக்டர் என்.சீ.அமரசிங்க**

பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

**கணக்காய்வாளர் குழு**

டாக்டர் என்.சீ.அமரசிங்க - பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

சீ.சேனாநாயக்க - தலைவர், பிரதிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்

டபிள்யூ.டீ.பீ.ஜே.வெலிவத்த - கண்காணிப்பாளர், கணக்காய்வு அதிகாரி, கணக்காய்வாளர் திணைக்களம்

ஈ.டபிள்யூ.ஏ.ஜீ.புன்யசிறி - உள்ளக கணக்காய்வாளர், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

பி.எம்.கே.பெரேரா - உதவிப் பணிப்பாளர்,

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

வங்கி

மக்கள் வங்கி - நாரஹேன்பிட்டி

# பொருளடக்கம்……………………


பக்கம்

1. அறிமுகம் 04

2. தூரநோக்கு, பணி, இலக்கு 05

3. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் செயற்பாடுகள் 06

4. 2013ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கற்கைநெறிகள், பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் 13

5. தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் 15

- **கற்கைநெறிகள்**
  - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி 16
  - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி 17
  - கைத்தொழிற்றுறையில் தாதியர்களுக்கான பயிற்சி 18
  - பெருந்தோட்டத்துறைப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் 19
- **மருத்துவ முகாம்கள் 20**
- **இவ்வருடத்தில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் 23**
  - கொழும்பை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டம் 23
  - போய்லர்மன் பயிற்சி 24
  - தொழிற்சாலைப் பணிகள் தொடர்பான பயிற்சி
  - கழிவுப˙பொருட்கள் முகாமைத்துவப் பயிற்சி 25
  - சான்றிதழ் வழங்கள் உற்சவம்
  - வருடாந்த கண்காட்சி 26
  - இணையத்தள அறிமுகம்
  - தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான கருத்தரங்கு 27

- ஊடக வியலாளர் மாநாடு 28

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் நூலகம். 31

- 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான . 32

  நிறுவகத்தினால் சுற்றுச்சூழல் நடவடிக்கைகள் மற்றும் தொழில் பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள்

- நிதி பகுப்பாய்வு, நிதி நிலைமை அறிக்கை 34-37

- **தணிக்கை அறிக்கை** 38

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

## அறிமுகம்

2009 இலக்கம் 38இல் அமைந்த தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவக சட்டத்தின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் இணைப்பு நிறுவகமாக தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் உருவாக்கப்பட்டது. இந்த நாட்டுக்குள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றினூடாக தொழில் ரீதியாக ஏற்படும் விபத்துக்கள் மற்றும் தொழில் சார் நோய்களை கட்டுப்படுத்தல் மற்றும் சரியான பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தலின் ஊடாக சௌபாக்கியமானதொரு தொழில் சூழலை அனைத்துப் பிரஜைகளுக்கும் பெற்றுக்கொடுக்கவே எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் பாடுபடுகின்றது. இதற்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஊழியர்கள் மற்றும் எந்தவொரு நபருக்கும் தேவையான கல்வியை தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் ஊடாக வழங்குகின்றோம்.

நிறுவனம் என்ற ரீதியில் மேற்குறிப்பிட்ட அனைத்துச் சேவைகளையும் நாம் சீராக மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, எமது நுகர்வோர் சமுதாயம் திருப்தியடையக்கூடிய நல்லதொரு சேவையையும் வழங்கி வருகின்றோம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்துக்குள் அடைந்த வளர்ச்சியே அதனை பறைசாற்றுக்கின்றது. அத்துடன், தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தினூடாக அடிக்கடி சேவைகளைப் பெற்றுக்கொண்டு வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளினூடாகவும் எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் திறனை நிரூபிக்க முடியும்.

இந்நிறுவனத்தின் ஆரம்பம் முதல் இன்று வரையில், ஏற்றுமதி வலயத்திலுள்ள பல ஆடைத் தொழிற்சாலைகள் போன்று இறக்குமதி ஏற்றுமதித் தொழிலில் ஈடுபடும் பெரும்பாலான நிறுவனங்களும் உற்பத்தித் துறையில் கால் பதித்துள்ள நிறுவனங்களும் பெருந்தோட்டத்துறை நிறுவனங்களும் எமது நிறுவனத்தின் சேவைகளைப் பெற்று மிகவும் சிறப்பாக தமது சேவைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்நிறுவனங்களுடன் இணைந்து அந்நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை கடந்த காலங்களில் மேற்கொண்டோம். இந்த வருடத்திலும் எமது சேவைகளை மிகவும் சிறப்பாக வழங்க மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றோம் என்பதுடன் இவ்வருடத்தில் எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தினால் முன்னெடுக்கப்பட்ட சேவைகள் தொடர்பான விபரங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## *தொலைநோக்கு*

*"தொழில் சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரிச் சேவைகளை அனைவருக்கும் பெற்றுக்கொடுத்தல்"*

## *திட்டம்*


*"தொழில் நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் தீங்குகளைக் குறைத்து உற்பத்தித்திறனை மேற்படுத்துவ்றதக்கான அனைத்துவிதமான கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் மூன்றாம் தரப்பினராகி, பங்குதாரர்களை பலப்படுத்தல்"*

## *குறிக்கோள்*

- தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உரிய அமைச்சருக்கு அனைத்து விதத்திலும் ஒத்தாசையாக இருத்தல்.
- தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான கொள்கைத் திட்டமொன்றை வகுப்பதற்கான கல்வி ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வுகளை நடத்துதல்.
- தொழில் சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரிகள் தொடர்பான கல்வி, பயிற்சிகளை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதலுக்கான அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தல்.

## தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கானநிறுவகத்தின் செயற்பாடுகள்

- ஊழியர்களின்பாதுகாப்பைஉறுதிசெய்வதற்கானஆய்வுகள்மற்றும்மேற்பார்வைகளைமேற்கொண்டு பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் இயந்திர உபகரணங்களின் பயன்பாட்டினை மேம்படுத்தல், உரிய தரத்தினாலான பாதுகாப்புக் கவசங்களின் உற்பத்திகள் தொடர்பில் கண்டறிதல் மற்றும் உரிய பாதுகாப்புச் கவசங்களை எந்நேரமும் பயன்படுத்துமாறு ஊழியர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தலின் ஊடாக அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வழிமுறைகளைக் காட்டிக்கொடுத்தல்.
- உரிய ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொண்டு தொழில் புரியும் இடங்களின் சத்தத்தின் அளவு, வெளிச்சத்தின் அளவு, தூசுக்களின் அளவு, வெப்பம் மற்றும் ஈரப்பதத்தின் அளவு உள்ளிட்ட சுற்றுச்சூழல் காரணிகள் தொடர்பில் ஆராய்தல் மற்றும் அவை, ஊழியர்களின் சுகாதாரத்துக்கு எந்தளவில் பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றன என்று கண்டறிந்து அதற்கேற்ற வகையில் சூழலை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல், வேலை பார்க்கும் இடங்களில் உள்ள ஆபத்தான நிலைமைகளை நீக்கல் அல்லது அவற்றைக் குறைத்துக்கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ஊழியர்கள் வேலை பார்க்கும் நிலை, அறிவியல் ரீதியான உழைப்பு தொடர்பில் ஊழியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் வேலைக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களை ஊழியர்களுக்கு ஏற்ற வகையில் வழங்குமாரு முதலாளிமார்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- ஆரோக்கியமானதொரு தொழிற் படையை உருவாக்குவதற்குத் தேவையான மேற்பார்வைகள் மற்றும் உரிய நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- தொழில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் தொடர்பில் ஆராய்ந்து உயரிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்த வழி சமைத்துக் கொடுத்தல்.
- பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தொழில் ரீதியாக நபர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் பயிற்சிகளை வழங்குதல், வேலை பார்க்கும் இடங்களில் ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்வது கடினமான விடயமாக இருப்பினும் அனைத்து தொழிற்றுறைகளுக்கும் சென்று அவற்றுக்கான பயிற்சிகளை வழங்குவதில் எமது நிறுவனம் அயராது செயற்பட்டு வருகின்றது.



## தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரின் செய்தி

தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான கொள்கை மற்றும் தேசத்தின் தேவைக்கான மஹிந்த சிந்தனைக் கொள்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால நோக்கின் ஊடாக அனைவருக்கும் சுகாதாரமாக வாழ்க்கை அமைய வேண்டும் என்பதே பிரதான குறிக்கோளாக உள்ளது. அதற்காக சுத்தமானதொரு சூழலை அமைத்துக்கொள்வதன் மூலம் சுகாதாரமானதொரு சமூகக் கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இந்த சுகாதாரமான சமூகக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்குடனேயே தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ், தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதனூடாக இந்த கட்டமைப்பை உருவாக்குவதென்ற தீர்மானமம் எட்டப்பட்டது. இதனூடாக, ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவத்தின் அவதானம் குறைவான வேலைகளை நிர்மாணித்தல் மற்றும் ஆபத்துள்ள தொழில் வலயமொன்றை உருவாக்குதல் போன்ற விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. இவை தொடர்பில் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவத்துக்கு எடுத்துரைத்து, அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு ஆபத்துக்கள் தொடர்பான பொறுப்புணர்வை முகாமைத்துவத்துக்கு எடுத்துரைத்தல் என்பன இவ்வேலைத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், இதற்கான முழுப் பொறுப்பும் ஊழியர்களைச் சென்றடைவதில்லை. அரசாங்கத்துக்கும் அதற்குச் சமமானதொரு பொறுப்பு கையளிக்கப்படுவதுடன் இவ்வேலைத் திட்டத்துக்கான அடிப்படை வசதிகள் மற்றும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் அனைத்தும் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. சட்டக் கொள்கைகளின் ஊடாகவும் இந்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்புக்களை வழங்க முடியும். இதற்கான தேசிய கொள்கை மற்றும் தகுந்த முறைமை ஒன்றை ஏற்படுத்துவதன் ஊடாக தொழில் நடவடிக்கைகளின் போது ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இதேவேளை, ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு தொழில் தருநர்களிடம் மாத்திரம் கையளிக்கப்படுவது இல்லை. அதற்கான அர்த்தப்படுத்தலும் இங்கு குறிப்பிடப்படவில்லை. ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பில் தொழில் தருநர்களுக்கு எந்தளவு பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமோ, அதேயளவு பொறுப்பு அரசாங்கத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளது. வேலை செய்யும் மக்களின் தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தல், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் அந்த தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் ஊழியர்கள் மற்றும் தொழில் தருநர்களுக்கு தெளிவுபடுத்தல்களை ஏற்படுத்தல் போன்றவற்றை வழங்கி அவர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் பணி ஆகும்.

இந்த அனைத்து வேலைத்திட்டங்களையும் சிறப்பாக மேற்கொள்வதற்கு குழு ரீதியில் தலைமைத்துவத்தை வழங்கிய அமைச்சு மற்றும் நிறுவகத்தின் நிர்வாகக் குழுவுக்கு இச்சந்தர்ப்பத்தில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதேவேளை, இந்த வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்த உதவிய பங்குதாரர்களான ஊழியர்கள், தொழில் தருநர்கள், அரசாங்க நிறுவனங்கள், அகில இலங்கை ஊழியர் சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஆதரவினையும் சக்தியையும் வழங்கிய எனது சகோதர அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இத்தருனத்தில் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காமினி லொக்குகே

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்



## தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர்,

## தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தலைவரின் செய்தி

2014ஆம் ஆண்டுக்கான தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான மத்திய குழுவின் விவாதத்துக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் 2013ஆம் ஆண்டு அறிக்கையை இந்த வெளியீட்டின் ஊடாக உங்கள் கைகளில் சேர்ப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் ஊடாக சுகாதாரமிக்க தொழிற் படையொன்றை உருவாக்க இந்த நிறுவகம் மிகவும் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன் சிறந்தவொரு சுற்றுச்சூழலையும் ஏற்படுத்திக் கொடுக்க மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளது. அனைத்து விதமாக தொழில் சார் ஆபத்துக்களை நீக்கிக் கொள்வதற்குத் தேவையான கல்வி மற்றும் பயிற்சிகள், அறிவுறுத்தல்கள் போன்ற பாரிய வேலைத்திட்டங்களை தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம், கடந்த வருடங்களில் வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்களின் ஊடாக புதிய தொழில் சார் பாதுகாப்பு கலாசாரமொன்றை இந்த தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் உருவாக்கியுள்ளமை பாராட்டுக்கு உரியமாகும். இந்த அனைத்துவிதமாக வேலைத்திட்டங்களின் ஊடாக நாட்டின் உற்பத்தி மற்றும் வினைத்திறன் என்பன அதிகரிப்பதற்கு தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் வழிசமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நோக்கங்களை அடைவதற்குத் தேவையான தலைமைத்துவம், சரியான வழிநடத்தல்கள் மற்றும் அனுசரணைகளை வழங்கிய தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த வெற்றி இலக்கை அடைவதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் மற்றும் ஒத்துழைப்புடன் சேவை ஆற்றிய தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் உள்ளிட்ட நிறுவனத்தின் அனைத்து முக்கியஸ்தர்கள் மற்றும் நிறுவனங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு அனைத்து விதத்திலும் ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் வழங்கிய தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அந்நிறுவகத்தின் நிர்வாகக் குழுவுக்கும் எனது நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜயவீர
செயலாளர், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு
தலைவர், தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

## தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



2014ஆம் ஆண்டுக்கான தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான மத்திய குழுவின் விவாதத்துக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் 2013ஆம் ஆண்டு அறிக்கையை இந்த வெளியீட்டின் ஊடாக உங்கள் கைகளில் சேர்ப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் ஊடாக நாடு முழுவதிலும் உள்ள வேலை செய்யும் மக்கள் மற்றும் முதலாளிமார்களின் தொழில் சார் ஆபத்துக்களை எடுத்துரைத்து அவர்களின் தொழில்கள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் மற்றும் தொழில் சார் நோய்கள் குறித்தும் விளக்கமளித்து அவற்றை போக்கிக் கொள்வதற்குமான வழிமுறைகளையும் நடப்பாண்டில் எமது நிறுவகமாகிய தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் அலப்பறியன. இதன்மூலம், சுகாதாரமானதொரு தொழிற்படையொன்று உருவாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் ஊடாக சுகாதாரமானதொரு தொழிற் படையொன்று உருவாக்குவதற்காக தொழில் ஸ்தலங்களின் ஆபத்தான நிலைமைகளை கண்டறிந்து அவை தொடர்பில் ஆராய்ந்து அவற்றை எவ்வாறு போக்கிக் கொள்வது என்பது தொடர்பில் விளக்கமளிப்பதன் மூலம் தொழில் ஸ்தலங்களில் உள்ள ஆபத்துக்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன் ஆபத்துக்களின்றி வேலை செய்யக்கூடிய சூழலொன்றும் எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது நிறுவகத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும்.

மேலும், தொழில் ஸ்தலங்களில் ஏற்படக்கூடிய தொழில் சார் நோய்களைக் கண்டறிந்து அவற்றை எவ்வாறு போக்குவது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ள ஊழியர்கள் மற்றும் நிறுவன நிர்வாகத் தரப்பினருக்கு எடுத்துரைத்து அவ்வாறான நோய்கள் ஏற்படா வண்ணமும் அவற்றைக் குறைத்துக்கொள்ளும் வழிமுறைகளையும் எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் வழங்கி வருகின்றது.

தொழில் சார் பாதுபாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக எமது தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தினால் பல்வேறு பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டு வருவதுடன் அதற்காக தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம், பாதுகாப்பாக செயலாற்றக்கூடிய அதிகாரிகள் உருவாக்கப்படுவதுடன் அவர்களின் ஊடாக தொழில் ஸ்தலங்களில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் மற்றும் தொழில் சார் நோய்களைக் குறைத்துக்கொள்ள முடிவதுடன் அதனால் நிறுவனத்தின் உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் வினைத்திறனுக்கு பாரியதொரு பங்களிப்பினை நல்க எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவனம் நடவடிக்கை எடுத்து அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றது.

மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கும் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான தலைமைத்துவம், சரியான வழிநடத்தல்கள் மற்றும் அனுசரணைகளை வழங்கிய தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி

லொக்குகே அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளரும் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் தலைவருமான டபிள்யூ.ஜே.எல்.யூவிஜயவீர அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு அனைத்து விதத்திலும் ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் வழங்கிய எமது நிறுவனத்தின் நிர்வாகக் குழு மற்றும் அனைத்து நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் திருமதி என்.சி. ஆமரசிங்க

பணிப்பாளர் நாயகம்

தேசிய தொழில் சார் பாதுபாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்


**பணிப்பாளர் சபை**

**தேசிய தொழில்சார பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்**

| | | |
|---|---|---|
| 1. திரு. டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜயவீர | தலைவர்/செயலாளர் | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு |
| 2. திருமதி பி.வீரசிங்க | தொழில் ஆணையாளர் நாயகம் | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு |
| 3. திரு. ரவி பீரிஸ் | பணிப்பாளர் நாயகம் | முதலாளிமார் சம்மேளனம் |
| 4. திரு. டபிள்யூ.எச்.பியதாச | தலைவர் | பொதுத்துறை ஊழியர்களின் சுதந்திர வர்த்தக சங்கம் |
| 5. திரு. லேஸ்லி தேவேந்திர | தலைவர் | இலங்கை சுதந்திர வர்த்தக சங்கம் |
| 6. டாக்டர் திருமதி.என்.விக்கிரமசிங்க | தொழில்சார் நோய் நிபுணர் | ஆசிரி வைத்தியசாலை, நாரஹேன்பிட்டி |
| 7. பேராசிரியர் திருமதி எஸ்.ஹேரத் | சமூகவியல் பிரிவு தலைவர் | சமூகவியல் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 8. திரு. எச்.கே.பாலசந்திர | பணிப்பாளர் நாயகம் | கட்டுமாண பயற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் |
| 9. திரு.டபிள்யூ.எல்.எஸ்.விஜேசுந்தர | தொழில் ஆணையாளர் | தொழிற்றுறை பாதுகாப்பு பிரிவு, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு |
| 10. திருமதி.சேனாநாயக்க | பிரதி பணிப்பாளர் | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| 11. டாக்டர் திருமதி. ஏ.ஜயலால் | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | சமூக சுகாதார சேவைகள் பிரிவு, சுகாதார அமைச்சு |


| | | |
|---|---|---|
| 12. திரு. எச்.எச்.ருச்சிர வித்தான | சிரேஸ்ட உதவிச் செயலர் | தொழில்நுட்ப பிரிவு,<br>தொழிற்றுறை அமைச்சு |
| 13.டாக்டர் திரு.டீ.பீ.டி.விஜேரத்ன | வேளாண்மை அபிவிருத்தி விவசாயம் மற்றும் தலைவர் | வேளாண்மை அபிவிருத்தி அமைச்சு |
| 14.டாக்டர் திருமதி என்.சி.அமரசிங்க | பணிப்பாளர் நாயகம் | தேசிய தொழில்சார்<br>பாதுகாப்பு மற்றும்<br>சுகாதாரத்துக்கான நிறுவகம் |

## 2013ஆம் ஆண்டில் இலங்கையில்
## சுற்றுச்சூழல் கண்காணிப்பு நடத்தப்பட்ட இடங்கள்




எமது நிறுவனத்தினால் சுற்றுச்சூழல் அளவீட்டு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளே இந்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.

# நிர்வாக அமைப்பு


பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் துப்புரவு)
பணிப்பாளர் (பாதுகாப்பு)
பிரதிப் பணிப்பாளர் (சுகாதாரம்)
பிரதிப் பணிப்பாளர் துப்புரவு
உடல்நலம் மற்றும் தொழில்சார் அதிகாரி
தொழில் பாதுகாப்பு அதிகாரி
பிரதிப் பணிப்பாளர் நிர்வாகம்
பிரதிப் பணிப்பாளர் நிதி
பிரதிப் பணிப்பாளர் சிவில
பிரதிப் பணிப்பாளர் இயந்திரவியல்
பிரதிப் பணிப்பாளர் மின்சாரம் மற்றும் இலத்திரனியல்
சட்டவாக்க அதிகாரி
நூலகர
ஒருங்கிணைப்பு அதிகார
முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (2)
ஓட்டுநர் (2)
அலுவலக உதவியாளர
தொழில்நுட்பம் அல்லாத முகாமைத்துவ உதவியாளர் (8)

## தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின்

## நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகள்

- தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி
- தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதல் பாடநெறி
- பெருந்தோட்டத்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி
- பொய்லர் இயக்குநர்களுக்கான பயிற்சித் திட்டம்
- தொழிற்சாலைகள் தொடர்பான ஆய்வு வேலைத்திட்டம்
- தொழிற்றுறை தாதியர்களுக்கான பயிற்சிநெறி
- வைத்தியசாலை சேவைக்கான தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார பயிற்சிநெறி
- அலுவலக நிர்வாகத்துக்கான தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார பயிற்சிநெறி
- ஆய்வுக்கூடங்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார பயிற்சிநெறி
- இரசாயனப் பொருட்களை பாதுகாப்பாக கையாள்வதற்கான பயற்சிநெறி
- உணவுகளை கையாள்பவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- மன அழுத்த முகாமைத்துவத்துக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள்

- சுற்றுச்சூழல் ஆராய்ச்சி
  - காற்றின் நிலைமையை ஆராய்ச்சி செய்வதற்காக Indoor Air Quality மற்றும் புகைப் பரிசோதனைக்காக Flu Gas Analyzer meter உபகரணங்களைப் பயன்படுத்தல்
  - தொழிற்சாலைக்குள் தூசுக்களின் அளவை அளவீடு செய்தல் மற்றும் தூசுக்களை வெளியேற்றும் உபகரணங்களைப் பாவித்தல்
  - சத்தத்தின் அளவை மதிப்பீடு செய்தல் மற்றும் சத்தத்தை அளப்பதற்காக Sound Level Meter உபகரணத்தைப் பயன்படுத்தல்.
  - வெப்பத்தின் அளமை மதிப்பீடு செய்தல் மற்றும் Heat Stress Meter (வெப்ப அழுத்தமாணி)ஐ பயன்படுத்தல்.

- மருத்துவ பரிசோதனைகள்
  - ஒலி அளவீட்டுப் பரிசோதனை
  - இரத்த பகுப்பாய்வு
  - வேலை செய்வதற்கான தகுதியை மதிப்பீடு செய்தல்
  - நுரையீரல் செயற்பாடு தொடர்பான பரிசோதனை
  - ஒளியியல் பரிசோதனை

- தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் சேவை

## 2013இல் நடத்தப்பட்ட பாடநெறிகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள்

எமது நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான விவரங்கள் கீழே காணப்படுகின்றன.

| பாடநெறி | காலம் | தகமைகள் | டிப்ளோமா/ சான்றிதழ் |
|---|---|---|---|
| தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி | 10 மாதம் | எமது நிறுவனத்தில் சான்றிதழ் பாடநெறியை மேற்கொண்டிருத்தல்<br>ஏற்றுக்கொள்ளக்கூடிய பட்டப்படிப்பை மேற்கொண்டிருத்தல்<br>தொழிற்றுறை சார் 5 வருட தொழில் அனுபவம் | டிப்ளோமா |
| தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி | 03 மாதம் | க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்ற தொழில் பாதுகாப்பு தொடர்பான ஆர்வம் மிக்க சகலருக்கும் | சான்றிதழ் |
| தொழிற்றுறை தாதியர்களுக்கான சான்றிதழ் பாடநெறி | 05 வாரம் | தொழிற்றுறை தாதியாக இருத்தல் | சான்றிதழ் |
| பெருந்தோட்டத்துறை தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் | 03 மாதம் | பெருந்தோட்டத் துறையைச் சார்ந்தவர்கள் | சான்றிதழ் |

### தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி

தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிகள் இரண்டு இவ்வருடத்தில் நடத்தப்பட்டன. இப்பாடநெறிகளுக்காக 2013 பெப்ரவரி மாதத்திலும் 2013 செப்டெம்பர் மாதத்திலும் விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இப்பாடநெறிக்கு தோற்றுவதற்கான மேற்கண்ட தகைமைகளுடன் வெவ்வேறு துறைகளைச் சார்ந்த நிர்வாக அதிகாரிகள் முறைப்படி 36 மற்றும் 22பேர் இணைத்துக்கொள்ளப்பட்டனர். அதேபோன்று, செப்டெம்பர் மாதம் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாதுகாப்பு துறையைச் சேர்ந்த நிர்வாக தரத்தில் சேவையாற்றுபவர்களாக

காணப்பட்டமை சிறப்பம்சமாகும். இந்த பாடநெறி தொடர்பில் எம்மால் மிகவும் நியாயமானதும் பிரயோசனமிக்கதுமான அறிவு வழங்கப்படுகின்ற அதேவேளை, இந்த பாடநெறிக்கு தோற்றுபவர்கள் இரண்டு தொழில்சார் பயணங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றமை இந்த பாடநெறியின் விசேட அம்சமாகும். அந்தவகையில், இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்துக்கும் சீதுவ லோர்ட்ஸ்டார் நிறுவனத்துக்கும் தொழில்சார் பயணத்தை மேற்கொண்டனர்.

இம்மாணவர்கள், இந்த பாடநெறியை மிகவும் சிறந்த முறையில் மேற்கொண்டு முடித்ததுடன் அடுத்த குழுவினர் அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் பாடநெறியை நிறைவு செய்யவுள்ளனர். இந்த பாடநெறிறை மேற்கொள்வதன் ஊடாக தாங்கள் தொழில் செய்யவிருக்கும் நிறுவனத்தில் மிகவும் பாதுகாப்பான பணியொன்றை முன்னெடுக்க முடியும். அதேவேளை, அங்கு வேலை செய்யும் ஊழியர்களின் பாதுகாப்புக்கும் இந்த பாடநெறி மிகவும் உறுதுணையாக இருக்கும். இதனூடாக தொழில் பாதுகாப்பு ஊழியர்களை உருவாக்கி பல்வேறு துறைகளுக்குள்ளும் இணைக்கும் பாரியதொரு சேவையை எமது நிறுவனம் வழங்கியுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். அதேபோன்று, இந்த பாடநெறியை மேற்கொள்வதன் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கான தகைமையும் கிடைக்கப்பெறுகின்றது. இந்த பாடநெறியை மேற்கொண்ட பாணவர்கள் பலர் தற்போது வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுச் சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





## தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி

2013ஆம் ஆண்டில், தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் பாடநெறிகள் இரண்டு நடத்தப்பட்டன. இந்த பாடநெறி ஒன்றின் காலம் 15 வாரங்களாகும். இதில் ஒரு பாடநெறிக்காக 17 மாணவர்கள் கலந்துகொண்டதுடன் அடுத்த பாடநெறியில் 25 மாணவர்கள் பங்கேற்றனர். இவர்கள் அனைவரும் இந்த பாடநெறியை மிகவும் வெற்றிகரமாக பூர்த்தி செய்தனர். இதனால், வேலை ஸ்தலங்களில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்த பாடநெறியால் பாதுகாப்பானதொரு அதிகாரிகள் சமூகம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான

அக்கரையுள்ளகல்விப்பொதுத்தராதரஉயர்தரத்தில்சித்தியடைந்தஎவரும்இந்தபாடநெறியைமேற்கொள்ள வேண்டும்.





## தொழிற்றுறை தாதியர்களுக்கான சான்றிதழ் பாடநெறி

இந்நாட்டில் வேலை செய்யும் மக்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகமானது இந்நாட்டில் வேலை செய்யும் மக்களின் தொழில் சார்ந்த பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் கண்டறிந்து உதவுவதில் பிரசித்தி பெற்றுள்ளது. இதன் பொருட்டு எமது நிறுவனத்தினால் உற்பத்தி, ஆடைக் கைத்தொழில், பெருந்தோட்டத்துறை தொடர்பில் நடத்தப்படும் பாடநெறிகள் போன்று அடிக்கடி நோய்வாய்ப்படல் மற்றும் சுகாதாரத்துக்கு கேடான தொழிற்றுறைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு உதவும் வகையிலேயே தொழிற்றுறை தாதியர்களுக்கான சான்றிதழ் பாடநெறியை ஆரம்பிக்க நாம் தீர்மானித்தோம்.

இந்த பாடநெறியின் முதல் குழு, கடந்த வருடம் வெற்றிகரமாக அதனை நிறைவு செய்தது. 2013ஆம் ஆண்டில், அதாவது இவ்வருடத்தில் இரு குழுக்கள் இந்த பாடநெறிக்காக இணைக்கப்பட்டுள்ளனர். 2013 ஏப்ரல் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பாடநெறியில் மேற்படி தொழிற்றுறைகளை மையப்படுத்திய 7 தாதியர்கள் கலந்துகொண்டு 5 வார காலத்தில் இப்பாடநெறியை நிறைவுசெய்தனர். அவர்களின் பாடநெறிக் காலம் நிறைவடைந்த பின்னர் இரண்டாவது குழு இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் பாடநெறியும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.





## ✚ பெருந்தோட்டத்துறைதொழில்சார்பாதுகாப்புமற்றும்சுகாதாரம்தொடர்பானஉயர்சான்றிதழ்

பெருந்தோட்டத் துறைக்கான தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியானது 2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அதில் இருபத்து ஆறு நிர்வாக அதிகாரிகள் கலந்துகொண்டு 3 மாத கால பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். இந்த பாடநெறியானது கோட்பாட்டு ரீதியாகவும் பயன்பாட்டு ரீதியாகவும் மேற்கொள்ளப்படுவதுடன் பாடநெறியை மேற்கொள்ளும் காலப்பகுதியின் போது இரண்டு நாட்கள் துறை சார்ந்த நிறுவனங்களுக்கு விஜயம் செய்து அங்கு அநுபவப் பயிற்சியும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனூடாக நாட்டில் உள்ள பெருந்தோட்டத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த முடியும் என்பதோடு அதற்கான வழிகாட்டியாகவும் திகழ முடிகிறது. தொழிற்றுறை பாதுகாப்பின் ஊடாக தொழில் நிறுவனங்களை மிகவும் சிறப்பான முறையில் மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.







அத்துடன், தொழிற்றுறை சார்ந்த பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பெருந்தோட்டத் துறையில் ஈடுபடுபவர்களின் சூழலை சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுத்தல் போன்றவற்றை இந்த பாடநெறியை மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். அத்துடன், “ தொழில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்” என்ற அதிகாரிகள் உருவாக்கப்பட்டு இத்துறைக்கு பலம் சேர்க்கப்படுகின்றது. இதனால், இந்த தொழிற்றுறையின் பெறுமதி அதிகரிக்கப்படுகின்றது. இந்த பாடநெறியை மேற்கொள்வதன் மூலம் இரு தரப்பிலிருந்தும்

சுமூகமானதொரு புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடிவதால் இந்துறையை சிறந்த முறையில் நடத்துவதற்கு வழிசமைக்கப்படுகிறது. இதுவரையில் இந்த பாடநெறியை மேற்கொண்டவர்களுக்காக தொழிற்துறை ஆலோசனை கையேடுகள் வெளியிடப்பட்டதுடன் அவற்றை பெருந்தோட்டத்துறை கைத்தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாடநெறியை முன்னெடுத்தவர்களுக்கு பாடநெறியின் இறுதியில் வழங்கப்படும் சான்றிதழுக்கு மேலதிகமாக ஏஎஞு தரமொன்றையுத் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ முகாம்கள் - ஏற்றுமதி செயல்முறை வர்த்தக வலயம்

ஸ்ரம வாசனா நிதியத்தின் நிதி உதவியின் கீழ் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் தலைமையில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. அந்த வகையில், பியகம, அவிஸ்ஸாவலை, கொக்கல, பல்லகெலே மற்றும் கட்டுநாயக்கா போன்ற பிரதேசங்களில் இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இதன்போது முக்கியமாக செவிப் பரிசோதனை, கண் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, நுரையீரல் பரிசோதனை போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன், நிறுவனத்தின் வேண்டுகோளுக்கமைய பல் பரிசோதனை, காச நோய் பரிசோதனை ஆகியனவும் மேற்கொள்ளப்படும் அதேவேளை, இந்த மருத்துவ முகாம்களுக்கு வருகை தரும் வைத்திய நிபுணர்கள், பரிசோதனைகளை மேற்கொள்ள வருபவர்களுக்கு சிறந்த மருத்து ஆலோசனைகளை வழங்குவதுடன் சிறந்த மருத்துவ சேவையையும் வழங்கி வருகின்றனர். இறுதியில், “ Fitness Assessment” என்ற மருத்துவ சான்றிதழ் ஒன்றும் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொள்பவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றமை விசேட அம்சமாகும். எமது நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் மிகவும் முக்கியமானதும் சிறப்பானதுமான செயற்பாடுகளில் இந்த மருத்துவ முகாம் விசேடத்துவமானது. இதன்போது தெரிவு செய்யப்பட்ட ஊழியர்கள் சிலருக்கு ஸ்ரம வாசனா நிதியத்தின் உதவியின் கீழ் இலவச மருந்துக் கண்ணாடிகளும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.









எமது நிறுவகத்தினால் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு,

**2013ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள் - அட்டவணை (அ)**

| | **நடத்தப்பட்ட இடங்கள்** | **பங்குபற்றியோர்** |
|---|---|---|
| 2013.03.21 | பியகம<br>Export processing Zone | 250 |
| 2013.04.30 | அவிஸ்ஸாவலை<br>Export processing Zone | 200 |
| 2013.06.03 | கொக்கல<br>Export processing Zone | 200 |
| 2013.09.06 | பல்லேகல<br>Export processing Zone | 119 |
| 2013.10.07 | கட்டுநாயக்கா<br>Export processing Zone | 120 |

.


இந்த வருடத்தில் எமது நிறுவனத்தினால் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள், எங்கு - எப்போது - எத்தனை பேரின் பங்குபற்றலுடன் நடத்தப்பட்டன என்ற விவரங்களை மேற்கண்ட தகவல் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**2013இல் இடம்பெற்ற மருத்துவ முகாம்கள் தொடர்பான விவர அறிக்கை - அட்டவணை (ஆ)**

மேற்கண்ட விவரங்கள் அடங்கிய - அட்டவணை (ஆ)இல், 2013ஆம் ஆண்டில் இடம்பெற்ற மருத்துவ

| பரிசோதனை | பியகம | | | அவிஸ்ஸாவலை | | | கொக்கல | | | பல்லேகலை | | | கட்டுநாயக்க | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பங்கு பற்றி யோர் | நோயா ளிகள் | % | பங்கு பற்றி யோர் | நோயா ளிகள் | % | பங்கு பற்றி யோர் | நோயா ளிகள் | % | பங்கு பற்றி யோர் | நோயா ளிகள் | % | பங்கு பற்றி யோர் | நோயா ளிகள் | % |
| **கண்** | **80** | **55** | **69** | **120** | **60** | **50** | **65** | **63** | **97** | **109** | **92** | **84** | - | - | - |
| **செவிப்புலன்** | **43** | **01** | **02** | **33** | **02** | **06** | **31** | **03** | **10** | **50** | **02** | **04** | **114** | **03** | **03** |
| **நுரையீரல்** | **85** | **12** | **14** | **35** | **06** | **17** | **35** | **08** | **23** | **75** | **25** | **33** | **115** | **32** | **28** |
| **இரத்தம்** | **25** | **03** | **12** | **29** | **08** | **28** | - | - | - | - | - | - | - | - | - |
| **காச நோய்** | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | **90** | **10** | **11** |
| **பல்** | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | **111** | **42** | **38** |
| **மொத்தம்** | | | | | | | | | | | | | | | |

முகாம்களின் போது நடத்தப்பட்ட பரிசோதனைகள் மற்றும் அந்த ஒவ்வொரு பரிசோதனையின் போதும் கலந்துகொண்டோர்களின் எண்ணிக்கை விவரங்கள் அடங்குகின்றன. இந்த விபரங்களை நோக்குகையில், கட்டுநாயக்கா ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்திலேயே பெரும்பாலானவர்கள் கலந்துகொண்ட மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியின் போது நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள், அவை நடத்தப்பட்ட இடங்கள், அதன்போது நடத்தப்பட்ட பரிசோதனைகள், அதில் கலந்துகொண்டவர்கள், அடையாளம் காணப்பட்ட நோயாளிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட நோயாளின் சதவீதம் ஆகியன இந்த அட்டவணை (ஆ)இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்விவரங்களை கீழ் கண்ட அட்டவணை மூலமும் விவரிக்க முடியும்.




**இலவசமாக நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள்**

கண்டி மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்களை முன்னிலைப்படுத்தி சேவையாற்றும் தமிழ் மக்களுக்காக 2013ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தினால் மடொல்கலை பிரதேசத்தில் மருத்துவ முகாமொன்று நடத்தப்பட்டது. இந்த மருத்துவ முகாமை நடத்துவதற்கான நிதி உதவியினை எமது நிறுவனமே வழங்கியது. இவ்வாறு இலவசமாக நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் 200பேர் பங்குபற்றியதுடன் அவர்களுக்காக கண் பரிசோதனை, காச நோய் பரிசோதனை, மற்றும் பல் பரிசோதனை ஆகியன நடத்தப்பட்டன. அத்துடன், இதன்போது கண் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 90 மருந்துக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## இவ்வருடத்தில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகள்

### கொழும்பை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டம்

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், கொழும்பு நகர சபையின் குழாய்நீர்ப் பிரிவில் கடமையாற்றும் பொறியியலாளர்களுக்கு தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக விளக்கமளிக்கும் 05 நாட்கள் கருத்தரங்கு ஒன்று கடந்த பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் அன்று முதல் தொடர்ந்து ஐந்து தினங்களாக இந்த கருத்தரங்கு தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தில் நடைபெற்றது.





இந்த கருத்தரங்கில் 20 அதிகாரிகள் கலந்துகொண்டதுடன் இவர்கள் சேவையாற்றும் இடங்களின் சுற்றுச்சூழல் மற்றும் அவ்வதிகாரிகள் கடமையாற்றும் இடத்தைப் பொருத்தவரையில் ஏற்படக்கூடிய நோய்களை எதிர்கொள்வதற்காக சரியான பாதுகாப்பு முறைகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொடுப்பதும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமைகளை சீர் செய்வதற்கும் சரியான

முறைகளை கையாண்டு அவ்வாறான ஆபத்தான நிலைமைகளை போக்கிக்கொண்டு தங்களது கடமையை சரியாக மேற்கொள்வதற்கு இந்த கருத்தரங்கு உதவி புரியும். இதன்மூலம் தொழிலை சீராக மேற்கொள்ள முடிவதுடன் ஆரோக்கியமானதொரு ஊழியர்களாக கடமையாற்றக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்த கருத்தரங்கை மேற்கொள்வதன் நோக்கமாகும்.

### பொய்லர் இயக்குநர்களுக்கான பயிற்சிநெறி

தேசிய ஸ்ரம வாசனா நிதியத்தின் நிதி உதவியின் கீழ் ஹட்டன் பிரதேசத்துக்கு உட்பட்ட வட்டவலை மற்றும் கௌனிவெல பகுதிகளிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளில் உள்ள பொய்லர் இயக்குநர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய அதிகாரிகள் அடங்கிய 45 பேர் கொண்ட குழுவினர்களுக்கான தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு 2013.10.04ஆம் திகதியன்று ஸ்டெதன் பயிற்சி நிலையத்தில் ஒரு நாள் செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது பொய்லர் இயந்திரங்களை எவ்வாறு கையாள்வது மற்றும் அது தொடர்பான நடைமுறைச் சிக்கல்கள் குறித்ர் இதன்போது அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தொழிற்சாலைகள் தொடர்பான ஆய்வு வேலைத்திட்டம்

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவனத்தினால் காலி முகத்திடலுக்கு அருகில் அமைந்துள்ள கிங்ஸ்பரி ஹோட்டலில் 2013ஆம் ஆண்டில் இந்த தொழிற்சாலைகள் தொடர்பான ஆய்வு வேலைத்திட்டம் இரு முறை நடத்தப்பட்டது. எமது நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இந்த ஆய்வு வேலைத்திட்டத்தின் போது அவுஸ்திரேலியாவின் பேராசிரியர் டேவிட் கேபல் கலந்துகொண்டிருந்தார். இதன்போது அவர் மிகவும் பயன்மிக்க கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தார். இதற்கு மேலதிகமாக, டாக்டர் திருமதி. என்.சி.அமரசிங்க மற்றும் ரம்யா ஜம்புரேகொட ஆகியோரால் நடத்தப்பட்ட கருத்துரைகள், மிகவும் பயன்மிக்கதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



அதேபோன்று, கொழும் காலி முகத்திடலுக்கு அருகில் அமைந்துள்ள கிங்ஸ்பரி ஹோட்டலில் நடத்தப்பட்ட தொழிற்சாலைகள் தொடர்பான ஆய்வு வேலைத்திட்டத்தின் போது பல்வேறு தொழிற்றுறைகளைச் சார்ந்த அதிகாரிகள் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர். தாங்கள் வேலை பார்க்கும் இடங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு அவற்றுக்கு ஏற்றவாறு எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தே இந்த வேலைத்திட்டத்தின் போது எடுத்துரைக்கப்பட்டது.

## கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டம்

- **வேலைத்திட்டத் 01**

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பல்வேறு தொழிற்றுறை நிறுவனங்களில் இருந்து ஐம்பத்து ஐந்து பேர் அடங்கிய கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று 2014 மார்ச் மாதத்தில் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தில் நடத்தப்பட்டது. ஒரு நாள் செயலமர்வான இந்த வேலைத்திட்டத்தில் நிர்வாகத் துறையைச் சார்ந்த அதிகார்கள் கலந்துகொண்டனர். பணிப்பாளர் நாயகம் திருமதி என்.சி.அமரசிங்க, ரம்யா ஜம்புரேகொட மற்றும் துஸ்யந்தி ரம்பிட்டிகே (ITI), ஸயன் அப்புஹாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

- **வேலைத்திட்டம் 02**

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் Nor Lanka நிறுவனத்தில் சேவையாற்றும் அதிகாரிகள் ஐம்பது பேர் அடங்கிய குழுவினருக்கு 2013 ஜூன் மாதம் 11ஆம் திகதி, தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தில் நடத்தப்பட்டது. ஒரு நாள் செயலமர்வாக இடம்பெற்ற இந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தில் நிர்வாக தரத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 60பேர் கலந்துகொண்டனர்.






## வருடாந்த கண்காட்சி

இந்த வருடத்தில் இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மத்திய நிலைய மண்டபத்தில் செப்டெம்பர் மாதம் நடத்தப்பட்ட மெடீ கெயார் 2013க்கு எமது நிறுவனமாக தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தினால் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

5 நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற இந்த கண்காட்சியின் போது எமது நிறுவனத்தின் காட்சியறைக்கு பெரும்பாலான மக்கள் வருகை தந்தனர். இவ்வாறு வருகை தந்த அனைத்து மக்களுக்கும், எமது நிறுவனத்தின் சேவைகள் குறித்து விளக்கமளிப்பதில் எமது அதிகாரிகள் சலைத்துவிடவில்லை. இதன்போது, நாம் எதிர்பார்த்திராத அளவு மக்கள் வருகை தந்ததுடன் இந்நாட்டில் காணப்படும் நிறுவனங்கள் போன்று வெளிநாட்டவர்களின் வரவேற்பையும் பெற்றுக்கொள்ள எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் தவறவில்லை.







## இணையத்தள திறப்பு விழா

எமது தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்துக்கு மற்றுமொரு மைல் கல்லாகவும் மிகவும் அத்தியாவசியமானதுமான தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் இணையத்தளம், 2013 பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவன கட்டிடத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது. தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே மற்றும் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜயவீர ஆகியோரின் தலைமையில் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவக வளாகத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. இதன் மூலம், இலங்கையிலுள்ள தொழிலாளர்கள் மற்றும் தொழிழ் தருநர்கள் ஆகிய இரு தரப்பினரதும் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க இந்த இணையத்தளம் மிகவும் உறுதுணையாக உள்ளது. இந்த இணைத்தளத்தின் மூலம் உள்ளூர் வாசிகள் மாத்திரமன்றி வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் மிகவும் பலன்களை அனுபவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





## தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஒன்றுகூடல்

தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான எமது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் வருடத்தின் மிகவும் கனம் மிக்கதும் பாரியதுமான வேலைத்திட்டமாகவே இந்த தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஒன்றுகூடல் அமைந்திருந்தது. இந்த ஒரு வார காலப்பகுதியின் போது  எமது நிறுவனத்தினால் மருத்துவ முகாம்களை நடத்துதல், கைத் தொலைபேசி பயிற்சிப் பட்டறை, தொழில் ஆபத்துக்கள் மற்றும் தொழில் சார் நோய்ககளைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் போன்றன முன்னெடுக்கப்பட்டதுடன் நாடு முழுவதிலும் உள்ள வேலை செய்யும் மக்களுக்கான நல்லதொரு சேவையை வழங்குவதே தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான எமது நிறுவகத்தின் ஒரே குறிக்கோளாகும். இதற்காகவே எமது நிறுவனம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்த வருடத்தின் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தை முன்னித்து அதன் ஆரம்ப விழா, 2013 ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் விமரிசையாக ஆரம்பிக்கப்பட்ட இந்த தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின் ஆரம்ப விாவுக்கு, தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி டாக்டர் என்.சி.அமரசிங்க தலைமை தாங்கி சிறப்பாக நடத்தி வைத்தார்.





இந்த தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின் ஆரம்ப விழாவில் தொழில் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திருமதி பர்ல் வீரசிங்க, சுதந்திர ஊழியர் சங்கத்தின் தலைவர் லெஸ்ல தேவேந்திர, இலங்கை ஊழியர் சம்மேளனத்தின் பணிப்பாணர் நாயகம் ரவி பீரிஸ் ஆகியோர் அதிதிகளகவும் சர்வதேச தொழிலாளர்கள் சங்கத்தின் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான தலைவர் டொங்லின் லீ, விசேட அதிதியாகவும் கலந்துகொண்டார். அத்துடன், சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜயவீர, பேராசிரியர் திருமதி ரோஹினி டீ. சேனவிரத்ன, இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஏ.டி.சூரவீர, சிங்கப்பூர் அரசாங்கத்தின் மனித வள அமைச்சின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் 3M நிறுவனம்மின் கொரியாவுக்கான இணைப்பாளர் ஹொய் முயுங் ஜங் உள்ளிட்ட பெரும்பாலான உள்ளூர் மற்றும் வெளியூர் பிரமுகர்கள் கலந்துகொண்டதுடன் மிகவும் பயன்மிக்க உரைகள் பலவற்றையும் ஆற்றி, இந்த தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் வருடாந்த ஒன்றுகூடலை சிறப்பாக்கினர்.

### ஊடக சந்திப்பு

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜயவீர ஆகியோரின் தலைமையில் 2013 ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதியன்று ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடத்தப்பட்டது. தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான வாரத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் வேலை செய்யும் மக்களை தெளிவுபடுத்தும் நோக்கத்திலேயே இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தப்பட்டது.




இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தொழில் ஆணையாளர் திருமதி பேர் வீரசிங்க, தொழிற்சாலைகள் பாதுகாப்பு பிரவு தலைவர் சுஜாதா விஜயசுந்தர, தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் திருமதி என்.சீ.அமரசிங்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். தொழில் சார் விபத்துக்களைக் குறைத்துக்கொள்வதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய

நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம், தொழிலாளர் திணைக்களம் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் திருமதி என்.சி.அமரதுங்க விளக்கமளித்தார். அத்துடன், தொழில் சார் பாதுகாப்பு தொடர்பில் எதிர்வரும் காலங்களில் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் விளக்கமளித்தார்.

### டிப்ளோமா சான்றிதழ் கையளிப்பு விழா

தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியை மிகவும் சிறப்பான முறையில் மேற்கொண்டு முடித்த நிர்வாக தரத்திலான சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மற்றும் நிர்வாக ரீதியிலான சேவைகளை எதிர்ப்பார்த்திருக்கும் அதிகாரிகளை டிப்ளோமாதாரிகளாக பட்டமளித்து அவர்களுக்கான சான்றிதழ்களைக் கையளிக்கும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழா, இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதியன்று, காலி முகத்திடலில் அமைந்துள்ள கலதாரி ஹோட்டலில் மிகவும் விமரிசையாக இடம்பெற்றது. இதன்போது, தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்த நான்காவது குழுவைச் சேர்ந்த 23 பேருக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்த சான்றிதழ் வழங்கும் விழாவில், எமது தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்துடன் இணைந்து பணியாற்றும் நிறுவனங்கள் பலவற்றினதும் நிர்வாக அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டு டிப்ளோமாதாரிகளுக்கு சான்றிதழ்களைக் கையளித்தனர். இந்த விழாவின் போது, மேற்படி டிப்ளோமா பாடநெறியை மேற்கொள்வதற்கான பொருளுதவிகளை வழங்கியவர்களுக்கான மரியாதைகளும் செலுத்தப்பட்டமை இவ்விழாவின் போது இடம்பெற்ற விசேட அம்சம் என்பது குறிப்பிடத்தக்கது.



பொய்லர் இயக்குநர்களுக்கான பயிற்சி நெறி, தொழிற்சாலைகள் தொடர்பான ஆய்வு வேலைத்திட்டம், கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டம், சான்றிதழ் வழக்கும் உற்சவம், வருடாந்த கண்காட்சி, இணையத்தள திறப்பு விழா, தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஒன்றுகூடல், ஊடகவியலாளர் சந்திப்பு ஆகியவற்றுடன் வெளிநாட்டு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஹோட்டல் வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கும் எமது தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் ஊடாக பல்வேறு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டமை என வருடம் முழுவதிலும் எமது நிறுவனத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

## தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நூலகம்

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவக கட்டடத்தின் கீழ் மாடியில் அமைந்துள்ள தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் நூலகத்தில், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான மிகவும் பிரயோசனமான புத்தகங்கள் பல உள்ளன. கீழ் காணப்படும் பாடத்திட்டங்கள் சார்ந்த புத்தகங்கள், வார இதழ்கள், கையேடுகள், ஆய்வறிக்கைகள், மறு பதிப்புக்கள், இரசாயன பாதுகாப்பு தரவு குறிப்புகள் மற்றும் தரவு அறிக்கைகள் போன்றன இந்த தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவக நூலகத்தில் காணப்படுகின்றன.

- தொழில் சார் சுகாதாரம்
- தொழிற்சாலைகள்
- சுற்றுச்சூழல்
- பொதுமக்கள்
- வேலை செய்வதற்கு ஏற்ற சூழல்
- தொழில் சார் பாதுகாப்பு
- இரசாயன பாதுகாப்பு
- தொழில் சார் நோய்கள்
- தொழிற்றுறை சார் சட்டக் கொள்கைகள்
- நச்சுத் தொழில்
- நீர் மற்றும் சுகாதார வசதிகள்

2013ஆம் ஆண்டில்

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவக


**உதவியின் கீழ் சுற்றுச்சூழல் நடவடிக்கைகள் மற்றும் தொழில் சார் பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள்**

- அக்சஸ் என்ஜினியரிங் தனியார் நிறுவனம் - ஹேனமுல்ல, நுகேகொடை
- அன்ட்லர் பெப்ரிக் பிரின்டர்ஸ் தனியார் நிறுவனம் - பிளியந்தலை
- பிரென்டிக்ஸ் இன்டிமேட் எப்பரல் - அநுராதபுரம், பொல்கஹாவெல, ரம்புக்கனை, மட்டக்களப்பு
- ப்ரென்டிக்ஸ் எசென்சல் லிமிடட் - ஹம்பாந்தோட்டை
- ப்ரென்டிக்ஸ் கெஸுவல் வெயா லிமிடம் - சீதுவை, ரிதிகம, ஏக்கல, கிரிதலே, இரத்மலானை
- சிலோன் கின்ட் டிரேட் தனியார் நிறுவனம் - எஹெலியகொட, மஹரகம, வதுருகம
- கோட்ஸ் ட்ரேட்ஸ் எக்ஸ்போர்ட் தனியார் நிறுவனம் - கொழும்பு 10, கொழும்பு 04
- குபிட் எக்ஸ்போர்ட் தனியார் நிறுவனம் ஸ்ரீ பலபிட்டிய, மாவத்தகம
- சிலோன் டி சர்விஸ் தனியார் நிறுவனம் - பேலியகொடை
- கலர்சூன் தனியார் நிறுவனம் - பிளியந்தலை
- சைனா ஹார்பர் என்ஜினியரிங் நிறுவனம் - ஹம்பாந்தோட்டை
- க்ரிஸ்டல் மார்டின் தனியார் நிறுவனம் - கட்டுநாயக்க, கலகெதர
- CBL ப்ஃருட் இன்டர்நெசனல் தனியார் நிறுவனம் - ரனால
- டீ.எஸ் காமன்ட் இன்டஸ்ட்ரீஸ் தனியார் நிறுவனம் - அத்திடிய
- டீ.டீ.சீ தனியார் நிறுவனம் - உதம்மிட்ட
- டீ.வி கம்பியூட்டர் லேபல் தனியார் நிறுவனம் - ஒருகொடவத்தை
- BASF லங்கா தனியார் நிறுவனம் - கொழும்பு - 02
- இலாஸ்டோமெரிக் டெக்னொலஜிஸ் நிறுவனம் - பிளியந்தலை
- ஈ.பீ. க்ரேஸி மற்றும் நிறுவனம் - மில்லேவ
- எம்.டீ. ஏக்ஸ்போர்ட் தனியார் நிறுவனம் - களுத்துறை
- EAM மெலிபன் டெக்ஸ்டைல் தனியார் நிறுவனம் - தெரனியகல
- கித்மா எம்ப்ரோய்டிங் தனியார் நிறுவனம் - தெஹிவல
- HI பெஃஸன் ஹோல்டிங் தனியார் நிறுவனம் - ஹோமாகம.
- ஹேலிஸ் அக்ரிகல்ஸர் - பியகம
- ஹய்ட்ராமிணி குரூப் தனியார் நிறுவனம் - கஹாதுடுவ, அவிஸ்ஸாவலை, சீதாவக, கட்டுநாயக்க
- ஹேலிஸ் MGT கினிடின் மில் தனியார் நிறுவனம் - நேபட
- இன்டர்பாஸ்ட் ஆசியா தனியார் நிறுவனம் - கொலன்னாவ
- ஜே.கே. காமன்ட் தனியார் நிறுவனம் - குருநாகலை
- ஜிபிஃ. உற்பட்ட SL தனியார் நிறுவனம் - மீரிகம, கொபெய்கனே, பன்னல

- கொரியன் ஸ்பா அக்சசரிஸ் தனியார் நிறுவனம் - ரனால
- LTL ப்ரொஜெக்ட் தனியார் நிறுவனம் - கொழும்பு 10
- லீடின் லேடி இன்டிமேட் லங்கா தனியார் நிறுவனம் - கட்டுநாயக்கா
- மொனா ப்ளாஸ்டிக் தனியார் நிறுவனம் - கொழும்பு 03
- மதரின் நைட் காமன்ட் தனியார் நிறுவனம் - கொழும்பு - 05
- நொரடெல் லங்கா தனியார் நிறுவனம் - கட்டுநாயக்கா
- நெல்னா ப.்.ர்ம் தனியார் நிறுவனம் - ரன்வல
- ஓரியன்ட் காமன்ட் தனியார் நிறுவனம் - மிரிஜ்ஜவல
- ஓரிட் காமன்ட் தனியார் நிறுவனம் - சீதாவக்க
  ஒனெலா எபரல்ஸ் - சீதுவ
- யூனியன் எபரல்ஸ் தனியார் நிறுவனம் - மஹரகம, சீதாவக்க, மாரவில
- யூனியன் நோர்த் தனியார் நிறுவனம் - யூனியன் இன்டஸ்ட்ரியல் வொசின் தனியார் நிறுவனம் - வைக்கால
- உபாலி கன்சியூம்மர் ப்ரடக்ட் தனியார் நிறுவனம் - கொழும்பு 13
- வி.வி கருணாரத்ன தனியார் நிறுவனம் - களனி
- ஆர்.எம்.ஹோல்டின் தனியார் நிறுவனம் - நீர்கொழும்பு
- ஹோல்சிம் லங்கா தனியார் நிறுவனம் - காலி
- ரெயின்போ பெ.்.சன் தனியார் நிறுவனம் இபலோகம
- ரிச் லைட் எக்ஸ்போர்ட் தனியார் நிறுவனம் - கெக்கிராவ
- சுமித்ரா காமன்ட் தனியார் நிறுவனம் - வீரகெட்டிய
- சுமித்ரா ஹசலக தனியார் நிறுவனம் - நிட்டம்புவ, ஹசலக
- ஸ்டைலிஸ் கெஸுவல் வெயா தனியார் நிறுவனம் - கிரில்ல, ஹோமாகம
- டெச்ஸ்டார் பெகேஜின் தனியார் நிறுவனம் - பியகம
- டய்மெக்ஸ் காமன்ட் தனியார் நிறுவனம் - மாவதகம
- யங் என்ட் இன்டர்நெசனல் லங்கா தனியார் நிறுவனம்
- ஸ்டார் காமன்ட் - கட்டுநாயக்க, கடுவெல
- ரிச் லய்ட் எபரல் தனியார் நிறுவனம் - இரத்தினபுரி
- யூனியன் கெமிக்கல் லங்கா நிறுவனம் - கொழும்பு 02
- லெடெக்ஸ் ப்ளான்ட் - ஜா எல
- வி.டி. மெனுபெக்சரின் தனியார் நிறுவனம் - கொத்மலை
- சியலிஸ் காமன்ட் தனியார் நிறுவனம் - ஹொரண
- எஸ்.கே யூனியன் காமன்ட் தனியார் நிறுவனம் - ஆணமடு
- ஸ்க்ரீன் லயின் ரேல்டின் தனியார் நிறுவனம் - களனி
- SGI லங்கா தனியார் நிறுவனம் - கட்டுநாயக்கா
- ஸ்டார் பெ.்.சன் க்ளோதிங் - கடுவெல

# நிதி பகுப்பாய்வு 2012 – 2013

| | 2013 | 2012 |
|---|---|---|
| தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடநெறி வருமானம் | 4,153,272.60 | 1,881,785.93 |
| சுற்றுச்சூழல் அளவீடுகள் தொடர்பான வருமானம் | 3,758,862.00 | 2,418,363.00 |
| பிற நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவு ஒப்பந்தம் மூலமாக கிடைத்த சேவைகளின் வருமானம் | 5,039,475.71 | 2,765,096.66 |
| நனோ தொழில்நுட்பம் மூலம் கிடைத்த வருமானம் | - | 490,000.00 |
| மருத்துவ பரிசோதனைகளின் மூலம் கிடைத்த வருமானம் | 864,403.88 | 350,176.00 |
| கட்டடம் வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானம் | 17,241.82 | 296,597.59 |
| தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார தினம் மூலம் கிடைத்த வருமானம் | 401,226.92 | 252,819.83 |
| வட்டி மூலம் வருவாய் (NIOSH அபிவிருத்தி நிதியம்) | 2,465,694.60 | 719,390.41 |
| இதர வருமானம் | 26,766.00 | 35,658.00 |
| **மொத்தம்** | **16,726,943.53** | **9,209,887.42** |



# நிதி நிலைமை அறிக்கை

**தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகம்**

2013 டிசெம்பர் 31க்கான ஐந்தொகை

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | **ரூபாய்** | **ரூபாய்** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பணம் மற்றும் அதற்கிணைந்தவை | குறிப்பு 1 | 1,136,807.76 | 3,482,695.31 |
| வரவுகள் | குறிப்பு 2 | 2,329,013.15 | 723,390.91 |
| அபிவிருத்தி நிதி | | 19,253,243.90 | 10,000,000.00 |
| | | 22,719,064.81 | 14,206,086.22 |
| **நடப்பு அல்லாத சொத்துக்கள்** | | | |
| திறைசேரி கணக்குகள் | | 267,500.00 | - |
| தாவர இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | குறிப்பு 3 | 13,881,852.94 | 8,500,217.32 |
| அமைச்சின் முடிவுற்ற மூலதனச் செலவுகள் | | - | 1,171,423.33 |
| | | 14,149,352.94 | 9,671,640.65 |
| மொத்தச் சொத்துக்கள் | | 36,868,417.75 | 23,877,726.87 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டியவை | குறிப்பு 5 | 1,481,439.04 | 1,936,879.45 |
| மொத்த பொறுப்புக்கள் | | 1,481,439.04 | 1,936,879.45 |
| தேறிய சொத்துக்கள் | | 35,386,978.71 | 21,940,847.42 |

**தேறிய சொத்துக்கள்**

| | | | |
|---|---|---|---|
| தேறிய மேலதிக பெறுமதி | குறிப்பு 4 | 33,736,978.71 | 21,940,847.42 |
| நன்கொடை மருத்துவ உபகரணங்கள் - தேசிய அறிவியல் அறக்கட்டளை | | 1,650,000.00 | - |
| | | 35,386,978.71 | 21,940,847.42 |

| | |
|---|---|
| டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜேவீர | பி.எம்.கே.பெரேரா |
| தலைவர் | A.D. நிதி |
| NIOSH | NIOSH |

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**

**2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று**

## திறைசேரியிலிருந்து பெறப்பட்டவை

**வருமானம்**

| | **2013** | **2012** |
|---|---|---|
| திறைசேரியிலிருந்து பெறப்பட்டவை | 5,639,601.93 | 7,348,623.37 |
| **வருமானம்** | 16,726,943.53 | 9,209,887.42 |
| | 22,366,545.46 | 16,558,510.79 |
| **(-)** | | |
| செலவினம் | | |
| நிறுவனம்சார் தாபன நிருவாகச் செலவினம் | 8,344,790.46 | 4,724,329.44 |
| நிதிச் செலவினம | 300.00 | - |
| | 1,299,406.08 | 832,301.65 |
| சேலவினம | 9,644,496.54 | 5,556,631.09 |
| **மிகை வருமானம்** | **12,722,048.92** | **11,001,879.70** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1 உரிமைப் பங்கினை அறிக்கையிடுதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், இலங்கை தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சின் கீழ் 2005 ஏப்பிரல் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்தது. தே.தொ.பா.சு.நி, விழிப்புணர்வினை அதிகரிப்பதனூடாகவும், சரியான சுகாதார, பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கைக்கொள்வதனூடாக அனைத்து மக்களுக்கும் சிறந்த வேலை நிலைமைகளுக்காக ஈடுபாட்டுடன் தொழிற்படுகின்றது. இந்த நிறுவகம், கொழும்பு - 05, ஜாவத்தை வீதி, இல.97 இல் அமைந்திருக்கின்றது.

### 1.2 முக்கிய செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

தே.தொ.பா.சு.நி, விழிப்புணர்வினை அதிகரிப்பதனூடாக, பொருத்தமான சுகாதார, பாதுகாப்பு சட்டவாக்கத்தைப் பின்பற்றுவதனூடாக அனைத்து மக்களுக்கும் சிறந்த வேலை நிலைமைகளுக்காக ஈடுபாட்டுடன் செயற்படுகின்றது. இச் செயற்பாடுகள், நாளது வரைப்படுத்தப்பட்ட தகவல், ஆலோசனை மற்றும் உசாவுகை சேவைகளைப் பரப்புதலை உள்ளடக்குகின்றது. இவர்கள், தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அத்தகைய பயிற்சி அதேபோன்று தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் கணக்கெடுப்புக்கள் மற்றும் புலன்விசாரணை ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளிலிருந்து நன்மைகளைப் பெறுகின்ற அனைத்து வகையான மக்களுக்கும் கற்பிப்பதுடன், பயிற்சியுமளிக்கின்றனர்.

### 1.3. தயாரிப்பின் அடிப்படை

(அ) இணக்கப்பாட்டுக் கூற்று

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள், ஐந்தொகை, வருமானக் கூற்று, ஒப்புரவு மாற்றக் கூற்று, பண ஓட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக் குறிப்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது. இந்த கூற்றுக்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் தரப்பட்டுள்ள சிறிய தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அளவீட்டின் அடிப்படை நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களில் பணவீக்கக் காரணிகளுக்கான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தொழிற்பாட்டு, சமர்ப்பிப்பு நாணயம்

இந்த நிதிக் கூற்றுக்கள் கம்பனிகளின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(2) **ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

(i) இனங்காணுதலும் அளவீடும்

பொருள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம், திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டிய சேத இழப்புக்களைக் கழித்த செலவில் அளவிடப்படுகின்றது.

பொறித் தொகுதி, இயந்திரமொன்றின்றின் செலவு, அதன் கொள்வனவு விலை மற்றும் அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்காக வேலை நிலைமைகளுக்கு ஆதனத்தைக் கொண்டு வரும்வரை நேரடியாக ஏற்படக்கூடிய செலவுகளைக் கொண்டிருக்கின்றது.

வேறாக கணக்கிடப்படுகின்ற ஆதனத்தின் பொருளொன்று, பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பகுதியொன்றை மாற்றுவதற்கு உறப்படுகின்ற செலவு, பதிவழிப்புச் செய்யப்படுகின்ற பகுதிக்காக எடுத்துவரப்படுகின்ற தொகையுடன் மூலதனமாக ஆக்கப்பட்டுள்ளது. ஏனைய முதலீட்டுச் செலவு, பொருள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தில் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கின்ற போது மட்டுமே முதலீடாக்கப்படுகின்றது.

(ii) பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வு, சொத்தின் மதிப்பிட்டுள்ள பயனுள்ள வாழக்கைக்காலத்தின் அடிப்படையில் நேர் ஒழுங்கினடிப்படை மீது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

நடைமுறை மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதிகளுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள வாழ்க்கைக்காலம் பின்வருமாறு:

| | ஆண்டு |
|---|---|
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 10 |
| கணினி உபகரணம் | 05 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 |
| ஒலி முறைமை பொருட்கள் | 05 |
| மருத்துவ உபகரணம் | 10 |
| ஏனைய சொத்துக்கள் | 10 |

(iii) நிலையான சொத்துக்கள்

இந்த நிறுவகம், தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்திடமிருந்து நிறுவகம் ஆரம்பிக்கப்படுகின்ற போது மாற்றப்பட்ட சில சொத்துக்களைக் கெண்டிருக்கின்றது. 2012 ஆம் ஆண்டில் சில சொத்துக்கள் ஐந்தொகையில் முன்னைய ஆண்டு சீராக்கலின் கீழ் முதலீடாக்கப்பட்டுள்ளதுடன், பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளது.

(iv) தேசிய ஆதாரமன்ற நிறுவகம், 2012.12.31 இலுள்ளவாறு கொள்வனவு செய்யப்படாமை காரணமாக ஐந்தொகையின் கீழே ஏற்கனவே பெறப்பட்ட உறப்பட்ட புதிய நனோ தொழில்நுட்ப மருத்துவ உபகரண கொள்வனவிற்காக 1,650,000 ரூபா நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No.
எல்எஸ்/சீ/என்ஐஓஎஸ்எச்/எப்ஏ/1/13/2

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2014 திசெம்பர் 29

தலைவர்,
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம்

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 17(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2014 மார்ச் 26 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 10(5) ஆம் பிரிவு | தற்காலிக மேலதிக பணத்தை, மீள கோரும் போது மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக திறைசேரியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், முன்னைய ஆண்டில் ரூபா 12,733,876 தொகையான மிகை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடனும் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் வழங்கப்பட்ட அங்கீகாரமொன்று இல்லாமல் ரூபா 9,253,244 மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 103(1) (உ),104(1)(அ), 104(4) மற்றும் 105(1)(இ) | 2012 ஏப்ரல் 23 ஆம் திகதி காணாமல் போன மடி கணனி தொடர்பாக பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 756 | நிறுவகத்தில் உள்ள நூலக புத்தகங்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | நிறுவகத்தினால் கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 12,722,049 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 11,001,880 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,720,169 ஆன முன்னேற்றமொன்றைக் காட்டியது. மிகையில் அதிகரிப்பிற்கு பல்வேறு பாடநெறி வருமானம் 92 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 நிதி மீளாய்வு

2012 ஆம் ஆண்டின் போது வருமானங்களுக்கு செலவின விகிதம் 34 சதவீதமாக இருந்த போதும் அது 2013 ஆம் ஆண்டின் போது 43 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டினை விட இவ்வாண்டின் வருமான ஈட்டல் ரூபா 5.8 மில்லியனுக்கு அண்மித்த அளவில் அதிகரித்திருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முறையாக கையேற்கப்படாத சொத்துக்கள்

நிறுவன வளவு அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் தொழில் திணைக்களத்திற்கு சொந்தமாக இருந்ததுடன், குறித்த ஆதனத்தைப் பொறுப்பேற்பதற்கு அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பதவியணியினர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 13 பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 25 ஆக இருந்ததுடன், வருடக் கணக்காக காணப்பட்ட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அவ்வெற்றிடங்களுக்கு இடையே சுகாதார உத்தியோகத்தர்கள் இந்நிறுவகத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக அத்தியவசியமான உத்தியோகத்தர்களாக இருந்த போதும் அந்த உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 வருடாந்த அறிக்கைகையை சபையில் சமர்ப்பித்தல்

2010 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், 2011 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2013 பெப்ரவரி 28 ஆம் திகதி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) திட்டமிடல்
(ஆ) நிதி முகாமைத்துவம்
(இ) பதவியணியினர் நிர்வாகம்
(ஈ) வாகன நிர்வாகம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)